விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 242 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 01 சனிக்கிழமை (17.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## காங்கேசன்துறை - நாகப்பட்டினம்
# பயணிகள் கப்பல் சேவை
## வெற்றிகரமாக நேற்று ஆரம்பம்
### நாள் தோறும் கப்பல் சேவையை இயக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இந்தியா நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்து 15




## ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து
## 'இயலும் ஸ்ரீ லங்கா' உடன்படிக்கை
### 34 கட்சிகள் கையெழுத்து



15

## தேர்தல் செலவுகளை மீறினால்
# வேட்பாளரின் பதவி பறிபோகலாம்
## பெஃப்ரல் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு) வேட்பாளர்கள் வரையறையை மீறிச் செலவு செய்தால் பதவி பறிபோவதோடு மூன்று வருடங்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என பெஃப்ரல் அமைப்பு எச்சரித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

PAFFREL

## ஜனாதிபதித் தேர்தலில்
## 27 அங்குல நீளமான வாக்குச்சீட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், வாக்குச்சீட்டு 27 அங்குல நீளமும் ஐந்து அங்குல அகலமும் கொண்டதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒற்றை நெடுவரிசையா? (மேலிருந்து கீழான பத்தி ) அல்லது இரட்டை 15

## வயிற்றுக்குத்து
## யாழ்.போதனாவில் இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வயிற்றுக்குத்துக் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியைச் சேர்ந்த முருகையா கிருபதீபன் 15

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, ஓமந்தை, ஆறுமுகத்தான்குளம் பகுதியில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் டயான் (வயது-21) என்ற இளைஞரே உயிரி 15

## வாழ்க்கைச் செலவுக்கு அமைய சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்
### இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு அமைய அரச மற்றும் தனியார் துறையினரின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான நிச்சயமற்ற தன்மை பொருளாதார மீட்சியின் மீதான பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் அதே 15

## பிரசார நிதி எங்கிருந்து கிடைக்கின்றது
### வேட்பாளர்கள் வெளியிட வேண்டும்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்திற்கான நிதி எப்படிக் கிடைக்கின்றது என்பது உள்ளிட்ட விபரங்களை ஜனாதிபதி 02

## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த பெண் மரணம்
### பண்டத்தரிப்பில் சம்பவம்

(பண்டத்தரிப்பு)

மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் இன்றிப் பயணித்த நிலையில் தவறி விழுந்து விபத்துக்குள்ளான இளம் குடும்பப் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் பண்டத்தரிப்பு சாந்தையினைச் சேர்ந்த நேசராசா பனுசா (வயது-33) என்ற இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் 15

## தமிழ் வேட்பாளர் விவகாரம்
## தமிழரசுக் கட்சி உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும்
### விக்னேஸ்வரன் எம்.பி



(கொழும்பு)

தமிழ் வேட்பாளர் விவகாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுக்காமல் இருப்பது 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய காவலன் திருமணப் பொருத்துனர்**
மாலி சந்தி, அல்வாய். கோப்பாய் சந்தி.

## மணமகன் தேவை

1995 ஆம் ஆண்டு பிறந்த திருவோண நட்சத்திரமும் 5 அடி 6 அங்குல உயரமும் அழகிய தோற்றமும் உடைய கனடாவில் டொக்டர் Final முடித்த மணமகளுக்கு டொக்டர்/ என்ஜினியர் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஸ்ரீலங்கா, அமெரிக்கா, நியூசிலாந்து, அயர்லாந்து போன்ற நாடுகளில் உள்ளவர்கள் கனடாவில் நிரந்தரமாக குடியேற விரும்புபவர்கள் மட்டும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு இல : **077 663 0273** (C-998)





ஓம் சாய் ராம்



# காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் காரைநகர் மற்றும் நவாலி வீதிக்குச் செல்லும் சந்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் (3Km) தூரத்தில் அமைந்துள்ளது.
- பிரதான காரைநகர் வீதி முகப்புடன் 78 (எழுபத்தெட்டு) பரப்புக் காணி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
- பிரதான பாதையுடன் முன்பக்கம் 11 (பதினொரு) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
- பின் பக்கம் பாதையுடன் தேவையான அளவு காணி பிரித்துக் கொடுக்கப்படும்.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை.

(1724)

தொடர்புகளுக்கு:- ஓம் சாய் ராம்
**077 676 3409, 074 120 5961**


## வேட்பாளரின்...

பெஃப்ரல் அமைப்பினர் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஹேன ஹெட்டியாரச்சி இதனைத் தெரிவித்தார்.

பெஃப்ரல் அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் எந்தவகையிலும் வன்முறை சம்பவங்கள் ஏற்படாதவகையில் தங்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதேபோன்று சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் பிரசார நடவடிக்கைகளில் இருந்து தவிர்த்துக்கொள்ளுமாறும் வாக்காளர்களை பணத்துக்கு வாங்குவதற்கு முயற்சிக்க வேண்டாம் எனவும் அனைத்து வேட்பாளர்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், இந்தத் தேர்தலில் முதற்தடவையாக தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் வேட்பாளர்களின் செலவு வரையறுக்கப்படும் சட்டத்துக்கு அமைவாக வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் செலவுகளை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த சட்டத்தை மீறி செயற்படும் வேட்பாளர்களின் பதவி இல்லாமல் போகும் நிலை இருக்கிறது.

அதேநேரம் யாராவது ஒரு வேட்பாளர் தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை மீறி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் குறித்த வேட்பாளருக்கு மூன்று வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் வேட்பாளராக இருக்க முடியாத நிலை இருக்கிறது. அதனால் தேர்தல் சட்ட திட்டங்களை பின்பற்றி கௌரவமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேட்பாளர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம-7)


## விற்பனைக்கு

2018ம் ஆண்டு நிசான் எக்ஸ்றயல் (Nissan x-trail) வாகனம் விற்பனைக்கு உள்ளது.

இடம் - யாழ்ப்பாணம் (1723)

தொடர்புகளுக்கு:-
**076 693 2227**


## பிரசார...

தேர்தல் வேட்பாளர்கள் வெளியிடவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

செப்ரெம்பர் 21 ம் திகதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செலவுசெய்யக்கூடிய பணத்தின் வரம்பினை தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிப்பதை வேட்பாளர்கள் பின்பற்றவேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி வெற்றிபெற்றவர் அறிவிக்கப்பட்டதும்,தாங்கள் செலவிட்ட பணம் குறித்த விபரங்களை வெளியிடுவதற்கு அனைத்து வேட்பாளர்களிற்கும் 21 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் அறிக்கையை ஆராய்ந்து பத்து நாட்களின் பின்னர் இணையத்தில் அது குறித்த விபரங்கள் வெளியிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்ததற்கு அதிகமாக வேட்பாளர் எவராவது செலவுசெய்திருந்தால் அவருக்கு எதிராக பொதுமக்கள் நீதிமன்றம் செல்லலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

மலர்வு 12 - 03 - 1962



உதிர்வு 09 - 08 - 2024

## திருமதி சாந்தினி திருவாதவூரன்

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தினி திருவாதவூரன் அவர்கள் 09.08.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா கனகரத்தினம்(கல்லூரி அதிபர்) - இராஜலக்சுமி தம்பதியினரின் செல்வப் புதல்வியும் Rotarian மார்க்கண்டு திருவாதவூரனின் (சட்டத்தரணியும் முன்னாள் கணக்காளர் - ஸ்ரீலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தலைவர் - சுன்னாகம் ஸ்ரீசத்திய சாய் நிலையம்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு(கல்லூரி அதிபர்) மற்றும் தவமணி (UK) தம்பதியினரின் பாசமிகு மருமகளும் கனிஸ்கா கௌரிகரன்(UK), திருவாதவூரன் சங்கராத்மஜன்(UK) ஆகியோரின் அருமைத் தாயாரும் தாமோதரம் கௌரிகரனின்(UK) அன்பு மாமியாரும் றியா(UK), றிஷான் (UK) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மார்க்கண்டு சிவநேசன் (Nee தீனதயாளன்) (Australia), பக்தவத்சலா கெங்காதரன்(UK), மார்க்கண்டு ஆலாலசுந்தரன் (UK) மற்றும் மார்க்கண்டு கௌரிகரன்(UK) ஆகியோரின் அருமை மைத்துனியும் அரியநாயகம் லிங்கேஸ்வரன்(UK), கௌரி ரவீந்திரன்(Australia), தர்மினி குகானந்தன்(Australia) மற்றும் வாசுகி ஐங்கரன்(Colombo) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சுன்னாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 18.08.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

210, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் வடக்கு, சுன்னாகம். 076 774 3991 (1722)
தகவல்: மார்க்கண்டு திருவாதவூரன்(கணவன்)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 08 . 1940



மறைவு 17 . 08 . 2008

## அமரர் வின்சன்டீபோல் பிலோமினா

அம்மா என்ற உறவு அற்புதமானது
அன்புடன் தான் வளர்த்து
அறிவையும் பண்பையும் நிறைத்து
வளமான வாழ்க்கையை
வளமார உளமார வாழ்ந்திட
வாழ வைத்த அன்புத் தெய்வமே!

ஆண்டுகள் பதினாறு ஓடி மறைந்தாலும்
அழியாது நிறைந்து நிற்கும் எம் தாயே.
கற்றுத் தந்தவள் நீ!
பற்று வைத்தவளும் நீ!
இனிய தருணங்களை எமதாக்கியவளும் நீ!
இற்றுவிடா இனிய வாழ்வை எமக்களித்து
அதில் நீ அற்றுப்போனதேன் அம்மா.

உதித்த மாதத்திலே உதிர்ந்த எம் கோயிலே
உமது வதனம் காணாது
உம் அருகே குடியிருந்த நாம் தவித்து நிற்கிறோம்
உம்மை என்றென்றும் நினைத்தும் இருப்போம்.

மண்ணுலகில் நீர் பெற்ற இன்பத்தை
விண்ணுலகிலும் பெற்று வாழ
உமக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(254)

வீதி, பருத்தித்துறை.
021 226 3129

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வரவுள்ள தேர்தல் கண்காணிப்புக்குழு

## ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம்

(கொழும்பு)

**செப்டெம்பர் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கைக்கு தேர்தல் கண்காணிப்புப் பணிக்குழுவை அனுப்புவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.**

இலங்கைத் தேர்தல் ஆணைக் குழுவின் அழைப்பைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் தேர்தல் செயன்முறைகளுடன் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

இலங்கை விடயத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் அர்ப்பணிப்பு மற்றும் பங்காளித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் ஆறு சந்தர்ப்பங்களில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்குத் தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுப்பியுள்ளது.

இதேவேளை, வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான ஒன்றியத்தின் உயர் பிரதிநிதியும், ஐரோப்பிய ஆணையத்தின் துணைத் தலைவருமான ஜோசப் பொரெல், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நாச்சோ சான்செஸ் அமோர் என்பவரை இலங்கை தேர்தலுக்கான தலைமைக் கண்காணிப்பாளராக நியமித்துள்ளார்.

இந்த நிலையில் அவர் தலைமையிலான கண்காணிப்புக்குழு விரைவில் இலங்கைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் கண்காணிப்பு தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய முறைமைக்கு இணங்க, தேர்தலுக்குப் பிறகு கண்காணிப்புக்குழு பூர்வாங்க அறிக்கையை வெளியிடுவதுடன் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டை நடத்தும்.

அத்துடன் எதிர்கால தேர்தல் செயல்முறைகளுக்கான பரிந்துரைகள் உட்பட இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தேசிய அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சீனத் தூதுவர் வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

சீன அரசாங்கத்தினால் வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு சுமார் ஆயிரத்து ஐந்நூறு மில்லியன் ரூபாய் பெறுமதியான வலைகள் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிலையில் அதனை கடற்றொழிலாளர்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


இதற்காக வடக்கு, கிழக்கு சார்ந்து வடக்கில் நான்கு மாவட்டங்களும், கிழக்கில் மூன்றுமாக ஏழு கடற்றொழில் மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் சீன தூதுவரின் விஜயத்திற்காக ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. (நி-6)

# 34 வருடங்களின் பின் கிடைத்த அனுமதி

## பொங்கல் பொங்கி வழிபாட்டில் ஈடுபட்ட நகுலேஸ்வர மக்கள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி வடக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆலயத்திற்கு சுமார் 34 வருடங்களுக்கு பின்னர் மக்கள் சென்று வழிபட இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீமத் நாராயண சுவாமி ஆலயத்திற்கு செல்லவே நேற்று வெள்ளிக் கிழமை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவ் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, அப்பகுதியில் வசித்த மக்கள் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு பொங்கல் பொங்கியதுடன், ஆலயச் சூழலில் சிரமதான பணிகளையும் முன்னெடுத்தனர்.

மிகவிரைவில் எம்மை எமது சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஆலயத்தை புனரமைத்து, தினமும் வழிபட அனுமதிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (நி-33)

# வெற்றிக்காக அல்ல; ஒற்றுமைக்காகவே போட்டியிடுகின்றேன்- அரியநேந்திரன்

(கொழும்பு)

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக போட்டியிடவில்லை, தமிழ் மக்களின் ஒற்றுமையை ஒரு சக்தியாக இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் காண்பிப்பதற்காகவே போட்டியிடுகிறேன் என தமிழ் பொது வேட்பாளரான பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வேட்புமனு கையளிப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,



சிங்கள அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை, கடந்த கால பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளன. இதன் காரணமாகவே இம்முறை தனித்து போட்டியில் இறங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை. தமிழ் பொது கட்டமைப்பின் ஒரு தரப்பினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள். யோசனைகள் முன்வைக்கப்பட்டு அவை பரிசீலிக்கப்படுகிறது.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெகுவிரைவில் வெளியிடுவோம். அத்துடன் தேர்தல் பிரசாரங்களையும் முன்னெடுப்போம். இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம். எமது வெற்றி அரசுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# சிறிசேனவுடன் கூட்டணியா?

## மறுக்கின்றது ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார் என வெளியாகியுள்ள தகவல்களை அந்தக் கட்சி நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் தவறான தகவல்கள் ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியாவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் அல்லது அவருடன் கூட்டணி வைக்க வேண்டிய தேவை ஐக்கிய மக்கள் சக்திக்கு இல்லை என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரின் பிரசாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தை சேர்ந்த சிலர் இவ்வாறான தகவல்களைப் பரப்புகின்றனர் என அந்தக்கட்சி தெரிவித்துள்ளது. (நி-6)



# எவருக்கும் ஆதரவில்லை-சிறிசேன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எவரும் ஆதரவளிப்பதில்லை என தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தன்னைப் பற்றிக் கட்சிகள் வெளியிட்டு வரும் விடயங்களை அவர் நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவி தொடர்பான விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் உள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனையவர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் செல்லுபடியற்றவை என குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் ரி-20 உலக கோப்பை தொடரை இந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ மறுப்பு

பெண்களுக்கான டி-20 உலகக் கோப்பைத் தொடரை இந்தியாவில் நடத்த பி.சி.சி.ஐ, மறுப்பு தெரிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சார்பில், வங்கதேசத்தில் பெண்களுக்கான டி-20 உலகக் கோப்பை தொடர் வரும் ஒக்டோபர் நடக்கவுள்ளது. 10 அணிகள், 18 நாள், 23 போட்டிகள் , தாகா, ஷில்ஹெட் என இரு மைதானத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கலவரம் காரணமாக வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகி இந்தியாவில் தஞ்ச மடைந்துள்ளார். அங்கு ராணுவம் ஆட்சி அமைத்துள்ளது. இதனால் வங்கதேசத்தில் இருந்து உலக கோப்பைத் தொடரை வேறு இடத்துக்கு மாற்ற ஐ.சி.சி., முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) செயலர் ஜெய்ஷா கூறியது:

பெண்களுக்கான டி-20 உலக கோப்பை தொடரை இந்தியாவில் நடத்த முடியுமா என ஐ.சி.சி. கேட்டது. இதற்கு நான் மறுப்பு தெரிவித்து விட்டேன். ஏனெனில் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் மழைக்காலம். தவிர அடுத்த ஆண்டு இந்தியாவில் பெண்களுக்கான உலகக் கோப்பை (ஒருநாள்) தொடர் நடக்க உள்ளது. இதனால் அடுத்தடுத்து உலகக் கோப்பை தொடரை நடத்தும் நிலை ஏற்படும் என்பதால் மறுப்பு தெரிவித்தேன்.

இவ்வாறு அவர் கூறினார் இதனால் இலங்கை அல்லது ஐக்கிய அரபு எமிரேட்சில் டி-20 உலகக்கோப்பை தொடர் நடத்தப் படலாம். இதுகுறித்து ஓகஸ்ட். 20இல் இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது. (நி-6)

## சச்சினை நெருங்கும் ரூட்



சச்சின் சாதனையை ஜோ ரூட் முறியடிப்பார், என பொண்டிங் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் அரங்கில் அதிக ரன் குவித்த வீரர்கள் வரிசையில் இந்திய ஜாம்பவான் சச்சின் முதலிடத்தில் உள்ளார். இவர் 200 டெஸ்டில் 51 சதம் உட்பட 15,921 ரன் எடுத்துள்ளார். அடுத்த 6 இடங்களில் அவுஸ்திரேலியாவின் பொண்டிங் (13,378 ரன்), தென் ஆபிரிக்காவின் காலிஸ் (13,289), இந்தியாவின் டிராவிட் (13,288), இங்கிலாந்தின் குக் (12,472), இலங்கையின் சங்ககரா (12,400), இங்கிலாந்தின் ஜோ ரூட் (12,027) உள்ளனர். இதில் ஜோரூட் மட்டும் தற்போது விளையாடிக் கொண்டிருக்கிறார். சமீபத்தில் வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்டில் அசத்திய ஜோ ரூட், டெஸ்ட் அரங்கில் 12 ஆயிரம் ரன்னை எட்டிய 7ஆவது வீரரானார். இவர், இன்னும் சிறிது காலம் விளையாடினால் சச்சின் சாதனையை முறியடிக்கலாம்.

இதுகுறித்து அவுஸ்திரேலிய ஜாம்பவான் ரிக்கி பொண்டிங் கூறுகையில், "டெஸ்ட் அரங்கில் தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் வீரர்களில் சச்சின் சாதனையை முறிய டிக்கும் வாய்ப்பு ஜோ ரூட்டிற்கு மட்டும் உள்ளது.

33 வயதாகும் ஜோரூட், சச்சினை விட 3894 ரன் பின்தங்கி உள்ளார். இவர் இன்னும் சிறிது காலம் சிறப்பாக விளையாடும் பட்சத்தில் அடுத்த 3 அல்லது 4 ஆண்டுகளில் சச்சின் சாதனையை முறியடிக்கலாம், என்றார். (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3198

### அபிநயா


ஏங்க நீங்களாவது உங்க ப்ரெண்ட்ட சொல்லக் கூடாதா அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்லன்னு...



நான் ஏன் சொல்லனும் பாவிப்பய...
எனக்கு அவன் சொன்னானா?..

### கரிஷ்

காது வலினு டாக்டர் கிட்ட போனதுக்கு மாத்திர போடுங்க சரியாயிடும்னு சொன்னாரு அதான்...



### தருணிகா


வாழ்க்கையிலே கஷ்டம் வரும் போதெல்லாம் மெகா சீரியல் தான் பார்ப்பேன்...



அவங்களுக்கு வராத கஷ்டமா நமக்கு வந்திற போகுது...

### விஷ்வா

நாளைக்கு செய்யலாம் என்று தள்ளி போடாத ஒரே விஷயம்...



போனுக்கு சார்ஜ் போடுவது தான்...

### அருண்

நான் விழுந்துவிட்டேன் என அனைவரும் கைதட்டி சிரித்துவிடாதீர்கள்...



நான் விழுந்ததே முளைப்பதற்க்குதான்..
~விதைகள்

### மாலினி

அந்த ஒரு சம்பவம் மட்டும் நடக்காம இருந்திருந்தா எனக்கும் என் மனைவிக்கும் எந்த சண்டை, சச்சரவு,கருத்து வேறுபாடு... எதுவும் வந்திருக்காது...
அப்படியா.. என்ன சம்பவம் அது..?



வேற என்ன..! எங்க கல்யாணம் தான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



கிளிநொச்சி இரத்தினபுரத்தைச்சேர்ந்த ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவ.திருக்கேதீஸ்பரன் எழுதிய புழுதிக்கதைகள் அனுபவப் பகிர்வு நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பதில் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (படம்-தேவானந்தன்)

# சென்.ஜோன் அம்புலன்ஸ் முதலுதவி நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ கடந்த காலங்களின் போது ஆலய வீதியின் வட மேற்கு மூலையில் இயங்கிய சென்.ஜோன் அம்புலன்ஸ் உற்சவ கால முதலுதவி நிலை யம் இம்முறை ஆலய தெற்கு வீதியில் இலங்கை வங்கிக் கிளை முன்றலில் யாழ்.மாநகர சபையின் உற்சவ கால பணி மனைக்குப் பின் புறமாக இயங்கிவருவதாக அந்நிறுவனத்தின் யாழ். மாவட்ட ஆணையாளர் எட்வாட் டிலிஷான் பக்தர்கள், பொதுமக்கள் மற்றும் சென் ஜோன் அன்புலன்ஸ் உடன் தொடர்புடைய அனைவருக்கும் தெரியப்படுத்துவதாக அறிவித்துள்ளார். (நி-6)




## வந்து குறை தீராயோ?

பல்லவி

வரந்தர வரவேண்டும் வடிவேலா!
வண்ணத் தமிழாலே நின்னைத் தினம் பாட... (வரந்)

அனுபல்லவி

நிரந்தரம் இல்லாத நிலவுலக வாழ்வில்
செஞ்சார நினைப்பாடி நிம்மதி நான் அடைய (வரந்)

சரணம்

கரங்குவித்தே நின் கழல்களைத் தொழுதிடுவேன்!
கனிவோடு நின் திருப்புகழினைப் பாடிடுவேன்!
சிரந் தாழ்த்தி வணங்கியுமே சிந்தை குளிர்ந்திடுவேன்!
சிங்கார வேலவனே! செந்தமிழ்க் காவலனே!... (வரந்)

நல்லையில் வாழுகின்ற செல்வக் குமரனே!
நம்பிடுவோர்க் கருளும் அம்பிகை பாலகனே!
கல்லும் கசிந்துருகக் கந்தா நினைப்பாட
வல்லமை தாராயோ? வந்து குறை தீராயோ? (வரந்)

**கலாபூஷணம் கீழ்கரவை.குலசேகரன்,**
**(ஓய்வு நிலை இலங்கை வங்கியாளர்),**
**அப்புத்தளை.**

## நல்லைக் கந்தவேளே!

ஆறுபடை வீட்டிலும் அலங்கார மாகவே
ஆனந்தக் காட்சிதருவாய்
ஆறுமுக மானவுரு அஞ்சுதலை நீக்கிப்பெரு
அருமருந் தாட்சிசெய்வாய்
கூறுமடி யார்மனதிற் குடியிருந்தே காணுங்
குறைதீர்த்து மாட்சிசெய்வாய்
ஏறுமயில் வாகனா! எழிலாடும் மோகனா!
எம்நல்லைக் கந்தவேளே!

**கலாபூஷணம்,**
**நவ.பாலகோபால்.**

# குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் புதிய அலுவலகம் வவுனியாவில் திறப்பு



(குருமன்காடு)

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் புதிய பிராந்திய அலுவலகம் வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக குறித்த பிராந்திய அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வவுனியா, உள்வட்ட வீதியில் செயற்பட்டு வந்த நிலையில் போதிய இடவசதி மற்றும் ஏனைய வசதிகள் இன்மையால் கடந்த 2 ஆம் திகதி முதல் அந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதனையடுத்து, புதிய அலுவலகம் போதிய வசதிகளுடன் 24 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், கடவுச்சீட்டு சேவைகளும் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன்போது குடிவரவு குடியகல்வு திணைக்கள சேவைகளைப் பெறுவதற்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வில் குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ச இலுக்பிட்டிய, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், ஆட்பதிவு திணைக்கள வவுனியா பிராந்திய அலுவலகப் பணிப்பாளர் கிருபாகரன், பொலிஸ் அதிகாரிகள், மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-6)

# இராசிபலன்

17.08.2024
ஆவணி 01, சனிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 4.45 மணிவரை

பூராடம் முற்பகல் - 10.42 மணிவரை
சுபநேரம்- 3.05-4.35 மணிவரை
இராகுகாலம்-9.05-10.35 மணிவரை

சனிப்பிரதோச விரதம்,
சந்திராஷ்டமம்
கார்த்திகை, ரோகிணி.

**வளவன்**

**மேஷம்:** புதிய திட்டங்கள் தீட்டி முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**கடகம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும், சுற்றத்தார் சந்திப்பால் சுகம் கூடும் நாள்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**ரிஷபம்:** குடும்பப் பொறுப்புக்கள் கூடும், உறவினர், நண்பர்கள் தொடர்பில் நிதானத்துடன் நடந்துகொள்வது நல்லது, பயணங்களின் போது கவனம் அவசியம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உங்களின் கருத்துக்களைப் பலரும் ஏற்று நடப்பர்.

**கும்பம்:** அந்நிய தேசத்தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு, செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:** கல்யாணக் கனவுகள் நனவாகும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், எடுத்த கருமங்கள் மாலை நேரம் தாமதமாகலாம்.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், போசன சுகமுண்டு, சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**தனுசு:** சவால்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** வங்கிச் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

தேவையற்ற பணம் பல பாவங்களைச் செய்ய உன்னைத் தூண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுடன் இணைந்தார் அலி சாஹிர் மௌலானா



(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆதரவை வழங்கியுள்ளார். (நி-6)

# ஐ.எம்.எப் உடன்படிக்கையில் மாற்றம் செய்தால் விளைவு விபரீதமாகும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய கொள்கைகளை கைவிட்டால் இலங்கை கடும் பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடும் என மத்திய வங்கியின் ஆளுநர் சனட்ரனாத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்களை செய்வோம் என இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முக்கிய அரசியல்வாதிகள் சூளுரைத்து வரும் நிலையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள பொருளாதார கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவிற்கு ஸ்திரப்படுத்தியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகப்போட்டியிடும் இருவரும் சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்ளப் போவதாக தெரிவித்துள்ளனர்.

தற்போதைய கொள்கைகளை மாற்றியமைக்க நினைத்தால் - அது நினைத்தும்கூட முடியாத விடயம்,அது சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்திலிருந்து விலகுவதற்கு வழி வகுக்கும்.

முழு உலகமும் எங்களை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றது.முழு உலகமும் எங்கள் மீது நம்பிக்கை வைப்பதற்காக சர்வதேச நாணயநிதியத்தின் திட்டத்தை அவதானித்தவண்ணமுள்ளது.

தற்போதிருக்கும் கொள்கைத் திட்டத்தில் சிறிய மாற்றங்களைச்செய்யலாம் ஆனால் நிதிக்கொள்கைகள் தொடர்பான நிலைப்பாட்டில், மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் அது இலங்கையைக் கடுமையாக பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலிற்கு பின்னர் கொள்கை மாற்றங்களை செய்வது குறித்து மத்திய வங்கி சிந்திக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(நி-6)

# கனடாவில் இனப்படுகொலை நினைவுத்தூபி

## அதிருப்தியை வெளியிட்ட அலிசப்ரி

(ஒட்டாவா)

**கனடாவின் பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.**



இலங்கை வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான கனடா தூதுவரை அழைத்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

கனடாவின் வாக்குவங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்தப் பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

பிராம்டன் நகரசபையின் தவறான ஆலோசனையின் அடிப்படையிலான செயற்பாடு இலங்கையில் உள்ள அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் புண்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டானது,தீங்கிழைக்கும் தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்ட புனையப்பட்ட மற்றும் தேசிய சர்வதேச அளவில் எந்தவொரு பொறுப்பான அதிகாரியாலும் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டு என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதார நெருக்கடி நிலவிய போதிலும்,மோதல் முடிவிற்கு வந்த பின்னர் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும், நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றது என தெரிவித்துள்ள அலிசப்ரி, கனடா அரசாங்கம் தலையிட்டு குறிப்பிட்ட நினைவுத்தூபியை கட்டுவதை தடுத்துநிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-6)

# மின்சார சபையில் மறுசீரமைப்பு அவசியம்

## அநுரகுமார தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மின்சார சபையில் உள்ளக மறுசீரமைப்பு அவசியம் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரத்துறை தொடர்பில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மின்சாரத்துறையில் பல் வேறுபட்ட குறைபாடுகள் நிலவுகின்றன.

அதனை நிவர்த்திக்க வேண்டுமாயின் உள்ளக மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக இலங்கை மின்சார சபையை மாற்ற முடியும் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-6)

# இலங்கையில் இடம்பெறும் சீனி மோசடி

## மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனி, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வெள்ளைச் சீனியுடன் கலந்து விற்பனை செய்யப்படுவதாக தெரியவந்துள்ளது.

இலங்கை சந்தைக்குள் பிரவேசிக்கும் சிவப்பு சீனி மோசடி தொடர்பான விபரங்களை நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளிப்படுத்தியுள்ளது.

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த வர்த்தகர் சில காலமாக இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த இடத்தில் 50 கிலோ



எடையுள்ள 2500 வெற்று சீனி பொதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், அதில் உள்ள சீனி இந்திய சிவப்பு சீனி என சந்தையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு கலக்கப்பட்ட சிவப்பு சீனி ஒரு கிலோ [illegible] விற்பனை செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)


யாழ்ப்பாணம் மாநகரசபை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

ஏலம் கோருவது தொடர்பான அறிவித்தல்-2024

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம் கோரப்படவுள்ளன.

- ஏலம் கோரவுள்ள திகதி :- 21.08.2024 முற்பகல் 10.00 மணிக்கு
- ஏலம் கோரப்படவுள்ள இடம் :- நானாவித இறைவரி பகுதி, மாநகர சபை வளாகம்.
- இது தொடர்பான மேலதிக விபரங்கள், நிபந்தனைகள், வரைபடம் என்பன தொடர்பாக மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் அறிந்து கொள்ளமுடியும் .

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம். (சி-994)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-வி.வத்சாங்கிதசர்மா, வயலின்-ஈ.வனஜா, மிருதங்கம்-வ.ரமணசர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 7.15-8.05 மணிவரை கண்டி சத்யசாயி கலாலயம் வழங்கும் நடன அரங்கில் நட்டுவாங்கம்-உமா சிறீதரன், பாட்டு-நா.சுபாகரன், வயலின்-இ.நிரோஜன் மற்றும் மிருதங்கம்-ம.லோகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.(நி-6)

# விமலநாயக்க தேரரை சந்தித்தார் அநுரகுமார



(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க நேற்று வெள்ளிக்கிழமை மீரிகம கந்தன்கமுவ ஸ்ரீ வித்யாவாச பிரிவென் மஹா விகாரையில் ராமக்ஞ மஹா நிக்காயவின் மஹா நாயக்க தேரர் மக்குலேவே விமலநாயக்க தேரரை சந்தித்தார்.

இன்றளவில் நாட்டில் நிலவுகின்ற அரசியல் நிலைமை பற்றி அவரை உள்ளிட்ட மஹா சங்கத்தினருடன் கலந்துரையாடிய தோழர் அநுர குமார திசாநாயக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அவர்களின் நல்லாசியைப் பெற்றுக்கொண்டார்.

இத்தருணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் தோழர் விஜித ஹேரத்தும் பங்கேற்றார். (நி-6)





# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, Driver (Own)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14720 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 17 ½<br>8 இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA, Teacher<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14732 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ: B/14722 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 6 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/14734 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>2 இல் சூரி செவ்<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: Bsc, Engineer<br>எதிர்பார்ப்பு: உயர் தொழில்<br>தொ.இ: B/14724 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: அனுஷம்<br>கி.பா: 36 1/2<br>4 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: HND IT, Company Work(Pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/14740 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இஸ்ரேலின் கொடூர தாக்குதல்

# பிறந்து இரண்டு நாட்களில் உயிரிழந்த இரட்டைப் பிள்ளைகள்

(இஸ்ரேல்)

இஸ்ரேல் இராணுவம் காசாவின் மீது நடத்திய தாக்குதலில், பிறந்து நான்கு நாட்களே ஆன இரட்டைக் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ள அதிர்ச்சிச் செய்தி, கேட்போரின் நெஞ்சங்களை பதைப்பதைக்க வைத்துள்ளது.



இஸ்ரேலின் தாக்குதலால் தற்போது வரை இறந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை என்பது 40,000 த்தை நெருங்கும் நிலையில் 1 வருட கால மாகியும் தற்போதுவரை போர் நிறுத்தத்திற்கான அறிகுறியே இல்லை. போரை கைவிடக்கோரி பல்வேறு நாடுகள் வலியுறுத்தியும் தற்போது வரை நின்றபாடில்லை.

கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் - காசாவிற்கு இடையே ஒலிக்க தொடங்கிய போரின் சத்தம் இன்று வரை ஓய வில்லை.

இதனால் பரிதாபமாக தங்களின் இன்னுயிரை துறந்துவரும் அப்பாவி பொதுமக்களின் துயரமும் இன்றுவரை மாறவில்லை. இந்த நிலையில்தான் ஒன்றும் அறியாத பிறந்து 4 நாட்களே ஆன பச்சிளம் குழந்தைகள் இருவர் இந்த குண்டுகளுக்கு பலியான சோகம் தற்போது காசாவில் அரங்கேறியுள்ளது.

காசாவில் வாழ்ந்து வருபவர் முகமது அபுவெல். இவரது மனைவி கருவுற்றிருந்த நிலையில் பாதுகாப்பு கருதி மனைவியோடு இஸ்ரேல் இராணுவத்தின் அறிவுறுத்தலின் பேரில் தனது குடும்பத்தோடு டெய்ர்-அல்-பலாவில் உள்ள தற்காலிக வீட்டில் தஞ்சமடைந்துள்ளார். இவரது மனைவி ஜுமனா அராஃபா, ஒரு மருந்தாளராக இருந்துள்ளார். இந் நிலையில் தான் கடந்த வாரம் இத்தம்பதிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

தங்களுக்கு குழந்தை பிறந்துள்ளது என்ற செய்தியை சமூக வலைத்தளப் பக்கத்தில் அறிவித்த முகமது அபுவெல்லின் மனைவி ஜுமனா அராஃபாவிற்கு, அடுத்து ஒரு கோர சம்பவம் அரங்கேறப்போகிறது என்று அப்போது தெரிந்திருக்க வில்லை.

சம்பவத்தின்படி பிறந்து நான்கு நாளே ஆன, அய்சல் மற்றும் அசர் என்ற தனது குழந்தைகளுக்கு பிறப்புச்சான்றிதழ் பதிவு செய்வதற்காக அரசு அலுவலகத்திற்கு சென்றுள்ளார் முகமது அபுவெல். அப்போது அலுலகத்தில் வந்த சிலர் முகமது அபுவெல் தங்கியிருந்த டெய்ர்-அல்-பலா என்ற இடத்திற்கு அருகில் இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது என்ற தகவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் பதறிப்போன முகமது அபுவெல், உடனடியாக தனது வீட்டிற்கு சென்று பார்த்த போது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் தனது மனைவி, இரட்டைக் குழந்தைகள், மாமியார் என அனைவரும் உயிரிழுந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார். அருகில் இருந்த அக்கம் பக்கத்தினர் பாதிக்கப்பட்டோரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த துயரச் சம்பவம் குறித்து உள்ளூர் ஊடகங்களிடம் தெரிவித்த அபுவெல், "குழந்தைகள் பிறந்ததைக் கொண்டாடக்கூட எனக்கு நேரம் கிடைக்க வில்லை" என்று கூறி கண்ணீர் வடித்துள்ளார்.

தனது இரண்டு குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழை கைகளில் வைத்து முகமது அபுவெல் கதறி அழும் காட்சிகள் காண்போரின் நெஞ்சங்களை நொருங்கச் செய்துள்ளது. (நி-6)

## முன்...

## கடும்...

(கீவ்)

ரஷ்யாவின் குர்...

தனது படைகள்...

ஜனாதிபதி ஜெல...

ரஷ்யா போரில்...



இந்த நகரத்தில் கிட்டத்தட்ட 5,000 பேர் வசிக்கின்றனர். மேற்கு

## வீட்டிற்கொரு விமானம் உள்ள நாடு எது தெரியுமா?

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கமரோன் ஏர்பார்க் என்ற சிறிய கிராமத்தில் அலுவலகத்திற்குச் செல்ல ஒவ்வொரு வீட்டிலும் விமானத்தை வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமான ஓட்டிகளுக்கான அனுமதி பத்திரம் மற்றும் விமானத்தை இயக்குவது பற்றிய முழுமையான விவரங்கள் தெரிந்தவர்களை தவிர வேறு எவருக்கும் விமானத்தை இயக்க அதிகாரம் இல்லை என கூறப்படுகின்றது.

கமரோன் ஏர்பார்க்கில் வசிப்பவர்கள் மற்றும் விமானங்களை ஓட்டுபவர்கள் பெரும்பாலும் தொழில் ரீதியாக அல்லது ஓய்வுபெற்ற இராணுவ விமானிகளாக காணப்படுகின்றனர்.

இந்தநிலையில் குறித்த கிராமத்தில் வசிக்கும் அனைவரும் தாங்கள் சொந்தமாக விமானங்களை வைத்திருப்பதை விரும்புகின்ற நிலையில் கமரோன் ஏர்பார்க் கடந்த 1963 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதுடன் இங்கே மொத்தம் 124 வீடுகள் அமைந்துள்ளன.

அத்தோடு விமானங்களை வீடுகளுக்கு முன்பாக நிறுத்துவதற்கு வசதியாக இங்கு 100 அடி அகலத்திற்கு வீதிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா விமானங்களின் செயற்பாட்டை ஊக்குவித்துள்ளது.

மேலும் விமான நிலையங்களை ஓய்வுபெற்ற இராணுவ விமானிகளுக்கான குடியிருப்பு விமானப் பூங்காவாக மேம்படுத்த அந்நாட்டின் விமானப் போக்குவரத்து ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் அதன் விளைவாகவே கமரோன் ஏர்பார்கில் வீட்டுக்கு ஒரு விமானம் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



## தாய்லாந்தின் புதிய பிரதமராக ஷினவத்ரா தேர்வு



(தாய்பே)

தாய்லாந்தின் புதிய பிரதமராக பேடோங்டார்ன் ஷினவத்ராவை அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

37 வயது பேடோங்டார்ன், ஃபியூ தாய் கட்சியின் தலைவராவார்.

இவர் முன்னாள் தாய்லாந்துப் பிரதமர் தக்சின் ஷினவத்ராவின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னேறும் உக்ரைன் ...ம் நெருக்கடியில் ரஷ்யா!

**... குர்ஸ் பிராந்தியத்தில் அமைந்துள்ள சட்ஜா நகரை ...கள் முழுமையாக கைப்பற்றியுள்ளதாக உக்ரைன் ... ஜெலன்ஸ்கி அறிவித்துள்ளமையானது உக்ரைன்- ...ில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.**



சைபீரியாவின் எண்ணெய் படிவுகளில் இருந்து பாயும் குழாய்கள்

இப்பகுதியில் அமைந்துள்ளன.

சட்ஜா நகரில் உக்ரைனின் இராணுவத் தளபதி அலுவலகத்தை நிறுவுவதாக ஜெலன்ஸ்கி அறிவித்தார்.

ஜனவரி முதல் உக்ரைனில் 1,175 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது, இப்போது முதல் முறையாக உக்ரைன் கிட்டத்தட்ட 800 சதுர கிலோமீற்றர் ரஷ்ய நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது என்று வோஷிங்டனை தளமாகக் கொண்ட இன்ஸ்டிடியூட் ஃபார் திஸ்டடி ஆஃப் வார் தெரிவித்துள்ளது.

இது ரஷ்யாவின் முகத்தில் விழுந்த அடியாகவே பார்க்கப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் சொந்த மண்ணில் ரஷ்யாவின் மிக மோசமான தோல்வி இதுவென்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மட்டுமின்றி ரஷ்யாவை அரண் போல காக்கும் மிக வலுவான நபர் என்ற



விளாடிமிர் புடினின் பிம்பம் சுக்கலாக நொருங்கியுள்ளது என்றும் குறிப்பிடுகின்றனர்.

துணிச்சலான நடவடிக்கையால் உலக நாடுகளின் கவனத்தை உக்ரைன் தங்கள் பக்கம் திருப்பியுள்ளதுடன், போரின் போக்கையே முற்றிலுமாக மாற்றியுள்ளது. (நி-6)

## குரங்கம்மை நோயுடன் முதலாவது நபர் சுவீடனில் அடையாளம்

### சுவீடன் பொதுச் சுகாதார அமைச்சர் அறிவிப்பு

(ஸ்டார்ஹோம்)

சுவீடனில் குரங்கு அம்மை நோயுடன் முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் சுவீடன் பொதுச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவில் குரங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ள நிலையில், பொதுச் சுகாதார அவசரகால நிலையாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆபிரிக்காவில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட சில மணிநேரங்களிலேயே சுவீடனிலும் இந்த நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நோய் பரவல் காரணமாகக் கொங்கோ குடியரசில் மாத்திரம் 450 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோய் நிலைமை திரிபடைந்துள்ளதுடன் உயிரிழப்பு வீதமும் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை எம் பொக்ஸ் நோய் நிலைமை வேகமாகப் பரவுவதற்கான சாத்தியம் நிலவுவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியிலான ஒன்றிணைந்த முயற்சிகள் அவசியமாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## கொரோனா தொற்றுக்குப் பின் எல்லைகளைத் திறக்கும் வட கொரியா



(பியாங்யாங்)

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிக்காக அதன் எல்லைகளைத் திறப்பதற்கு வடகொரியா தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் அதன் எல்லைகளைத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக சுமார் ஐந்து வருடங்களாக வடகொரியா சுற்றுலாப்பயணிகளுக்காகத் தமது எல்லைகளை மூடியிருந்தது.

இந்தநிலையில் தென்கொரியா சுற்றுலாப் பயணிகளைத் தவிர ஏனைய நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வடகொரியாவிற்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எல்லை மூடல் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியையும் பாரியளவில் பாதித்திருந்தது.

நாட்டின் அணுசக்தித் திட்டம் காரணமாகச் சர்வதேச நாடுகள் தடைகளை ஏற்படுத்தியிருந்தன.

இதன் காரணமாக, உணவுத் தட்டுப்பாடு உச்சத்தை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலதாமாளிகைக்கு சென்று ஆசி பெற்றார் சஜித்



(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் மத அனுஷ்டானங்களில் ஈடு பட்டு தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்காக எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட் பாளருமான சஜித் பிரேம தாஸ ஆசீர் வாதங்களைப் பெற்றுக் கொண் டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று காலை ஸ்ரீ தலதா மாளிகைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந் தார்.

தலதா மாளிகைக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலை வரை தியவடன நிலமே உள் ளிட்ட விகாரை பஸ்நாயக்க நிலமேமார்கள் வரவேற்று ஆசிவழங்கினர். (நி-6)

# அநுராதபுரம் சென்று ஆசி பெற்றார் நாமல்



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கள மிறங்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அநுராதபுரம் ஜய ஸ்ரீ மகா போதிக்கு சென்று ஆசீர்வாதம் பெற்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியும், தனதுதந்தையுமான மகிந்தராஜ பக்ஷவுடன் இணைந்து நேற்று அநுராதபுரத்திற்கு நாமல் ராஜபக்ஷ சென்று ஆசீரைப் பெற்றுக்கொண்டுள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 160 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 150 | 300 | 250 | 300 |
| தக்காளி | 250 | 300 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 100-120 | 200 |
| கோவா | 350 | 330 | 300 | 300 | 400 |
| கரட் | 300 | 380 | 380 | 300 | 400 |
| பூசணி | 160 | 160 | 140 | 100 | 120 |
| புடோல் | 80 | 120 | 150 | 120 | 150 |
| வாழைக்காய் | 300 | 300 | 250 | 200-260 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250-400 | 200-400 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 300 | 350 | 400 | 250 | 300 |
| வெண்டக்காய் | 150 | 100 | 120 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 200 | 300 | 300 | 250 | 250 |
| கறிமிளகாய் | 500 | 800 | 700 | 350 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 140 | 180 | 60-80 | 150 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 400 | 600 |
| கத்தரி தம்புள்ள | 160 | 100 | 180 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 500 | 500 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 60-100 | 60-110 | 80-130 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 250 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | 80 | 50 | 80 | 80 |

# இன்று ஒரு தகவல் 213



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## யார் பெரியவர்?

ஐந்து விரலும் ஒரே மாதிரியாகவா இருக்கின்றது என்று ஒரு உதாரணம் சொல்வது உண்டு.

அதாவது இந்த உலகத்திலே வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும் அதற்காக ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

ஒரு சமயம் இந்த ஐந்து விரலுக்குள்ளேயே சண்டை வந்து விட்டதாம். யார் பெரியவர் என்கின்ற சண்டை.

கட்டை விரல் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் அதுதான் முதலிலே பேச ஆரம்பித்தது தலையைத் தூக்கிக்கொண்டு. உயரம் தான் அதற்கு குறைவே தவிர வாய் நீளம் போல இருக்கின்றது. அது என்ன சொன்னது தெரியுமா?

நான் குட்டையாக இருக்கின்றேன் என்று எல்லோரும் சொல்கின்றார்கள். அகத்தியர் கூட என்னை மாதிரி குட்டையாகத் தான் இருந்தார். இருந்தாலும் அவருக்குள்ள சக்தி வேறு யாருக்கு உண்டு.

பார்வதி கல்யாணம் நடந்த சமயத்திலே எல்லோரும் வடக்கே ஒன்று கூடினார்கள். இப்போது இந்த பூமியே வடக்கே அழுத்தி தெற்கே உயர ஆரம்பித்தது. அதை சமப் படுத்துவதற்கு அகத்தியரை மட்டும் பரமசிவன் தெற்கே அனுப்பிவைத்தார். பூமி சமமாகியது.

அப்படி என்றால் அவருடைய நிறை எப்படி என்று புரிந்து கொள்ள வேண்டும். அது மாதிரி தான் நான் கையில் இருக்கின்றேன். ஏதாவது ஒரு பொருளை தூக்க வேண்டும் என்றால் நான் ஒரு பக்கமும் நீங்கள் நான்கு பேரும் இன்னொரு பக்கமும் இருக்க வேண்டியுள்ளது. அதனாலே தான் நான் பெரியவன் என்றது கட்டை விரல்.

இதை கேட்ட உடனே மற்ற நான்கு விரலும் சும்மா இருக்குமா? அவற்றிற்கென ஒரு கௌரவப் பிரச்சினை இருக்கிறதல்லவா? ஆட்காட்டி விரல் நிமிர்ந்து நின்றது.

இதோ பாருங்கள் யாரை சுட்டிக்காட்ட வேண்டும் என்றாலும் நான் தான் தேவைப் படுகின்றேன். அதனாலே நான் தான் பெரியவன் என்றது.

அது சொல்வதும் நியாயம் தானே.

அந்த தெருவிற்கு எந்த வழியாக போக வேண்டும் என்று கேட்டால் இதோ இந்த வழியாகப் போங்கள் என்று கட்டை விரலையா காட்டுகின்றோம்? அப்படி காட்டினால் ஏதோ அபிநயம் பிடிக்கின்றோம் என்று நினைத்து விடுவார்கள்.

அடுத்த படியாக நடுவிரல் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் மிகவும் சாவகாசமாக எழுந்து நின்றது.

எதற்கு வீணகாக பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். எல்லோரும் எழுந்து நில்லுங்கள். யார் உயரம்? என்று அளந்து பார்த்து விடுவோம். அப்படி பார்த்தால் நான் தானே பெரியவன் என்றது.

அடுத்ததாக இருக்கின்ற மோதிரவிரல் சும்மா இருக்குமா? அது மேலே போட்டிருந்த தங்கமோதிரத்தை எல்லோருடைய கண்ணிலும் படுகின்ற மாதிரி அப்படியும் இப்படியும் திருப்பிக் காட்டியது.

ஒரு மனிதன் தான் மிகவும் பெரிய மனிதன். வசதியானவன் என்று காட்டிக் கொள் வதற்காக மோதிரம் போடுகின்றான். அப்படி மோதிரம் போடுவதற்கு உங்களிடமா வருகின்றான்? என்னிடம் தானே வருகின்றான். எனக்கு தானே போடுகின்றான்.

விலை உயர்ந்த பொருளை எல்லாம் நம்பி போட்டு வைப்பதற்கு நான்தான் பொருத்தம் என்பதை மனிதன் புரிந்து வைத்திருக்கின்றான்.

அப்படி இருக்கின்றபோது நீங்கள் அதை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றால் எப்படி? என்று ஒரு அடி அடிச்சது மோதிரவிரல்.

நான்கு விரலும் அவற்றிற்குப் பொருந்துகின்ற மாதிரி ஒரு கருத்தை எடுத்து சொல்லியது. கடைசியாக இருந்தது பாவம் அந்த சுண்டுவிரல் தான். பரிதாபமாக நின்றது.

நான் தான் பெரியவன் என்று சொல்வதற்கு அதற்கு ஒரு கருத்தும் கிடைக்கவில்லை. அது அழுதுகொண்டே கடவுளிடம் போனது.

தன்னுடைய நிலைமையை சொன்னது. அது மாதிரி எல்லோரும் சொல்கின்றார்கள். எனக்கு ஒரு மாதிரியாக இருக்கின்றது.

கடவுளும் அதனுடைய காதில் இரகசியம் ஒன்றைச் சொல்லி அனுப்பினார்.சுண்டு விரல் தைரியமாக திரும்பி வந்தது.

மற்ற விரல்களைப் பார்த்து சொல்லியது உங்கள் எல்லோரையும் விட நான் தான் பெரியவன். இதிலே உங்களுக்கு சந்தேகமே வரவேண்டியதில்லை.

கோயிலுக்குப் போய் சாமி கும்பிடுகின்றோம். இரண்டு கைகளைக் கூப்பி கும்பிடு கின்றபோது நான் தான் உங்கள் எல்லோருக்கும் முன்னாலே நிற்கின்றேன். அதனாலே ஆண்டவனுக்கு மிகவும் நெருக்கமாக பக்கத்திலே இருக்கின்றது நான்தான் என்றது.

இந்தக்கருத்தை மற்ற விரல்கள் ஏற்றுக்கொண்டது. யார் இறைவனுக்குப் பக்கமாக இருக்கின்றார்களோ அவர்கள் தான் பெரியவர்கள்.

இதிலே ஒரு முக்கியமான தத்துவம் என்னவென்றால் சுண்டுவிரலிற்கு நான் தான் பெரியவன் என்கின்ற எண்ணம் ஏற்படவில்லை. அது தான் வெற்றியின் இரகசியம்.

நான் தான் பெரியவன் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இரண்டு ஆசாமிகள். ஒரு நாள் காலையிலே வாக்கிங் போகின்ற போது எதிர் எதிரிலே சந்தித்துக் கொண்டார்கள்.

அதிலே ஒருவர் கேட்டார். என்னப்பா நீ தான் வாக்கிங் போகின்றாய். இந்த குரங்குக் குட்டியையும் எதற்கு கூட அழைத்துக் கொண்டு போகின்றாய் என்றார். அடுத்தவருக்கு கோபம் வந்து விட்டது.

என்னப்பா உனக்கு கண் தெரியவில்லையா? இது குரங்குக்குட்டி இல்லை நாய்க்குட்டி நல்லாப்பாரு என்றார்.

அதற்கு இவர். நான் கேட்டது உன்னிடம் இல்லை. அந்த நாய்க்குட்டியிடம் என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பாதுகாப்பு சபையின் தேசிய விருது வழங்கும் விழா





(வவுனியா)

இலங்கை சமூகப் பாது காப்புச் சபையின் விருது வழங்கும் விழாவானது நேற்று முன் தினம் வவுனியா நோர்த்வே ஹோட்டலில் நடைபெற்றது.

இந் நிகழ்வானது இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வடக்கு- கிழக்கு சிரேஷ்ட இணைப்பாளர் திரு பா. பிரதீபன் தலைமையில் இடம் பெற்றது.

இலங்கை சமூகப் பாது காப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் பணம் சேகரிப்புத் திட்டத்தில் அகில இலங்கை ரீதியாக யாழ்.மாவட்டம் முதலிடம் பெற்றமைக்கான விருது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர். ம.பிரதீபனுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அதேவேளை இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2023 ஆண்டுக்கான ஓய்வூதி யத்திட்ட நடைமுறைப்படுத் தலில் முல்லைத்தீவு மாவட்டம் தேசிய இலக்கினை பூர்த்தி செய்தமைக்கான தேசிய விருதினை இலங்கை சமூக பாது காப்பு சபையின் தலைவரால் மாவட்ட செயலாளர் அ.உமா மகேஸவரனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இந் நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் திருமதி.லிசோ கேகிதா ,முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர்(பதில்) திருமதி.க. ஜெயபவானி , மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மு.முபாரக், மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பதிகாரிகள், ஆகியோருக்கு தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் இவ்விருது வழங்கும் விழாவில் 2023 ஆண்டுக்கான தேசிய அடைவு மட்டத்தினை (1000) பூர்த்தி செய்தமைக்கான தேசிய விருதுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கும் மற்றும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றமைக்காக புதுக்குடியிருப்பு , துணுக்காய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் தேசிய விருதுகளுக்குரிய ஏனைய மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சமூக பாதுகாப்பு சபையின் உயர்மட்ட அதிகாரிகள், மாவட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (நி-6)

## சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சங்காபிஷேகமும் மணவாளக்கோல உற்சவமும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேக கிரியைகளைத் தொடர்ந்து விசேட ஆராதனைகள் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து 7.30 மணிக்கு விநாயகப் பெருமாள் பூந்தண்டிகையில் வீதி வலம் வரும் காட்சி இடம்பெறவுள்ளது. (நி-6)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வித்தகபுரம்-பொற்கலத் தம்பை விசாலாட்சி அம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.40 தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (நி-6)

## செயற்திட்ட குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கான பல்வேறுபட்ட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய வாசிப்பு மாத செயற்றிட்ட குழுவை நியமிப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு வலி கிழக்கு பிரதேசசபை நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

வலி கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தர் உள்ளூராட்சிப் பகுதிக்குரிய பொது சுகாதாரப் பரிசோதகர், பாடசாலை அதிபர் மற்றும் நூலகர் களை கலந்து கொள்ளுமாறு புத்தூர் பொதுநூல் நிலைய நூலகர் அறிவித்துள்ளார். (நி-6)

## வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளராக சர்வானந்தன்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளராக வைத்திய கலாநிதி தி.சர்வானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பதில் ஆணையாளர் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே, பிரதி மாகாண ஆணையாளராகக் கடமையாற்றி வந்த வைத்திய கலாநிதி தி.சர்வானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கான நியமனக் கடிதம் அண்மையில் வடமாகாண ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத் தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து தலைமை அலுவலகத்திலிருந்து 2024.08.07 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலக அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத் தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்கத் தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும்தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப்போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமூகமளித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)

## செட்டிகுளத்தில் வாள்வெட்டு

## 4 பேர் படுகாயம்

(குருமன்காடு)

செட்டிகுளம், மெனிக்பாம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் நான்கு பேர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அதிகாலை குறித்த வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த போது இனம்தெரியாத நபர்கள் வீட்டிற்குள் நுழைந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன் வாள்வெட்டு தாக்குதலிலும் ஈடுபட்டனர்.

இதன் போது வீட்டில் இருந்த முதியவர்களான ஐயர் மற்றும் அவரது மனைவி அத்துடன் குறித்த வீட்டில் இருந்த மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் பறயநாலங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 558





நீ முல்லையாற்றங் கரையோடு போனால் பழையாறையை அடையலாம்." "நீங்கள் கொஞ்சம் சீக் கிரமாகவே குதிரைக் குளம் புக்குக் கவசம் அடித்துக் கொடுத்தால் நல்லது."

"இதோ!" என்றான் கொல்லன். வளைத்துக் காய்ச்சியிருந்த இரும்பைச் சுத்தியினால் அடிக்கத் தொடங்கினான்.

"இது பெரிய பழுவேட்டரையருக்கு! இது சின்னப் பழுவேட்டரையருக்கு! இந்த அடி சம்புவரையருக்கு! இது மழவரையருக்கு!" என்று சொல்லிக் கொண்டே அடித்தான். இதிலிருந்து அந்தச் சிற்றரசர்கள் பேரில் நாட்டு மக்கள் எவ்வளவு கோபம் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒருவாறு வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான்.

குதிரைக் குளம்புக்கு லாடம் அடித்து முடிந்தது. செய்து கொடுத்த வேலைக்காகக் கொல்லனுக்குக் காசு தர வந்தியத்தேவன் யத்தனித்தான். கொல்லன் அதைப் பெற்றுக் கொள்வதற்கு மறுத்து விட்டான்.

"நீ நல்ல பிள்ளை என்பதற்காகச் செய்து கொடுத்தேன். காசுக்காகச் செய்து தரவில்லை" என்றான்.

வந்தியத்தேவன் மறுபடியும் கொல்லனுக்கு நன்றி கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான். புறப்படும் சமயத்தில் கொல்லன், "தம்பி! பழையாறைக்கு நீ எதற்காகப் போகிறாய்?" என்று கேட்டான்.

"ஐயா! நீங்கள் என்னை அதைப் பற்றி ஒன்றும் கேட்காமலிருந்தால், நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது" என்றான் வல்லவரையன்.

கொல்லன் சிரித்துவிட்டு, "அப்பனே! நீ துரிதமாகக் கெட்டிக்காரன் ஆகி வருகிறாய்! தூங்குகிறபோதும் இவ்வளவு ஜாக்கிரதையாயிரு!" என்று சொல்லி, விடை கொடுத்து அனுப்பினான்.

வந்தியத்தேவன் மறுபடியும் பிரயாணம் தொடங்கிய போது சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகி விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தி மயங்கி இருள் சூழ்ந்து வந்தது. இதற்குள் முல்லையாற்றங்கரையை வல்லவரையன் பிடித்து விட்டான். அதற்கு மேல் ஆற்றங்கரையோடு போக வேண்டியது தான். வழி விசாரிக்க வேண்டிய அவசியம் கூடக் கிடையாது.

முன்னிருட்டு வேளை தான். ஆனால் வானத்தில் ஆயிரங்கோடி நட்சத்திரங்கள் ஒளிச்சுடர்களாக விளங்கின. முல்லை நதியின் கரைகளில் மரங்கள் அதிகம் இல்லை. சிறிய சிறிய புதர்கள்தான் இருந்தன. ஆகையால் வழி கண்டுபிடித்துப் போவதற்கு வேண்டிய வெளிச்சம் விண்மீன்கள் தந்தன.

வானத்தில் ஜொலித்த நட்சத்திரங்களோடு போட்டியிடுவது போல ஆயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகள் நதிக் கரைப்புதர்களைச் சுற்றி வட்டமிட்டு விளையாடிக் கொண்டிருந்தன. வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் உற்சாகம் ததும்பியது. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. நாடெல்லாம் இளவரசரைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருக்கும் போது அவனுக்கு மட்டும் அவர் பத்திரமாயிருக்கிறார் என்ற செய்தி தெரிந்திருந்தது. இளவரசரிடம் சோழ நாட்டு மக்கள் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறார்கள் என்பதை ஓரளவு தெரிந்து கொள்ள முடிந்தது. மந்திரவாதி ரவிதாஸனை அவன் மறுபடியும் ஏமாற்ற முடிந்ததை நினைக்கக் குதூகலமாயிருந்தது. இதையெல்லாம் விடக் குந்தவை தேவியைச் சீக்கிரத்தில் பார்க்கப் போகிறோம் என்ற எண்ணம் அவனுக்கு எல்லையில்லாத மனக் கிளர்ச்சியை அளித்தது.

வெறுமனேயா பார்க்கப் போகிறான்? இளைய பிராட்டி கூறிய காரியத்தைச் செய்து முடித்து விட்டுப் பார்க்கப் போகிறான்! அந்தக் காரியத்துக்கு ஏற்பட்ட தடங்கல்களையெல்லாம் நினைத்து, அவற்றையெல்லாம் தான் எதிர்த்து வெற்றி கொண்டதையும் எண்ணி அவன் பெருமிதம் அடைந்தான்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்



## சமயோசித புத்தியால் தப்பித்தாள்

(நேற்றைய தொடர்ச்சி)

அவனிடமிருந்து தப்புவதற்காக அவள் ஒரு யோசனையுடன் திடீரென்று நின்றாள். அவனும் நெருங்கி அவள் அருகில் வந்தான். அவள் அழுது கொண்டே, "ஐயா, என் கணவனின் கொடுமை தாங்கமுடியாமல், மனம் வெறுத்து, வீட்டைவிட்டு வெளியேறி தான் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தோடு இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன். ஆனால், தூக்கு மாட்டிக் கொள்ள மரக்கிளையில் கயிறு கட்டத் தெரியவில்லை, நீ அதற்கு உதவி செய்தால் நல்லது" என்று கண் கலங்கியபடி சொன்னாள்.

அவள் அணிந்திருந்த நகைகளைக் கவர்ந்து செல்லும் எண்ணத்தில் தெருப்பாடகன் இருந்தான். அதனால், அவள் தூக்கில் தொங்கி, செத்துத் தொலைந்தால், நகைகளை எளிதாக எடுத்துக் கொள்ளலாமே என்ற ஆசையில் சரி என்று சொல்லி, மரத்தில் ஏறினான். கயிறைக் கட்டி, மற்றொரு நுனியில் சுருக்கு முடிச்சுப் போட்டு விட்டாள்.

"ஐயா, எனக்கு எட்டாத உயரத்தில் சுருக்கு தொங்குகிறதே! அதிலே எப்படி நான் கழுத்தைக் கொடுப்பது? உயிர் போகாவிட்டால், அவமானப்பட்டு தண்டனைக்கும் அவமானத்துக்கும் ஆளாக நேரிடுமே. ஆகையால், நீ முதலில் செய்து காட்டினால், நான் அப்படியே செய்வேன்" என்றாள் அவள்.

தெருப்பாடகனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. தன்னுடைய மிருதங்கத்தை நிமிர்த்தி வைத்து, அதில் ஏறி நின்று, சுருக்கு முடிச்சை கழுத்தில் மாட்டிக் கொண்டு எட்டுமா என்று சோதித்துப் பார்த்தான்.

அந்தச் சமயம் சித்திராங்கி, படீரென்று மிருதங்கத்தை காலால் உதைத்துத் தள்ளிவிட்டாள். சுருக்கு முடிச்சு தெருப்பாடகனின் கழுத்தை நெறித்தது.

தனக்கு வந்த ஆபத்தை சமயோசிதமாக நீக்கிக் கொண்ட சித்திராங்கி, மகிழ்ச்சியோடு பயணத்தைத் தொடர்ந்தாள். கருமி உயிரை பறிகொடுத்தான் சமயோசித புத்தியினால் அவள் தப்பித்துக் கொண்டாள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தீர்வுகளின் தேடல் சில ஆச்சர்யங்களுக்கும், சோதனைகளுக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனநாயகத்தின் பேரால் நடக்கின்ற இனவாதம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 39 பேர் போட்டியிடுகின்றனர்.

இவ்வாறு அதிகளவானவர்கள் போட்டியிடுவதானது, ஜனநாயகத்துக்கு விரோதமான செயல் என்றே கூற வேண்டும்.

ஆம், 39 பேர் அடங்கிய வாக்குச்சீட்டின் அளவு எவ்வாறாக இருக்கும் என்பதும் அந்த நீண்ட நெடும் வாக்குச்சீட்டுக்குள், தாம் தாம் விரும்புகிற வேட்பாளர்களைத் தெரிவு செய்வதென்பது சாதாரண மக்களுக்கு எத்துணை கடினமானதென்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

தவிர, வாக்குச்சீட்டுக்கள் நீண்டதாக இருப்பதால் அவற்றை மடித்து வாக்குப் பெட்டிக்குள் இடுவது, அவற்றை எண்ணி முடிப்பது என்பனவெல்லாம் கடினமானவையாகி விடுகின்றன.

இத்தகைய கடினத்தன்மை துல்லியமான முடிவுகளுக்குக் குந்தகம் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் முக்கியமான வேட்பாளர்களின் பினாமிகள் என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

ஆக, வாக்குகளைச் சிதறடித்து, வாக்காளர்களைக் குழப்பியடித்து வெற்றியைத் தமக்குச், சாதகமாக ஆக்கிக் கொள்வதற்காக கண்டபாட்டில் வேட்பாளர்களை நிறுத்துகின்ற அநியாயச் செயல் ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேற்றப்படுகிறது.

இதுதான் என்றால், இல்லை; இங்கு ஜனாதிபதித் தேர்தல் என்பது ஜனநாயக ரீதியில் ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்கானதெனக் கூறப்பட்டாலும் ஐந்து ஆண்டுகளுக்குகொருமுறை இந்த நாட்டில் இனவாதத் தீயை நூரவிடாமல், பெருந்தீயாக எரிப்பதற்குமானதென்பது இங்கு உணர்தற்குரியது.

இதை நாம் கூறும்போது அதற்கான சான்று என்ன? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறான கேள்விக்குக் கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களே சான்று என்போம்.

ஆம், கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களின் போதெல்லாம் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, தென்பகுதி அரசியல்வாதிகள் கொட்டித் தீர்த்த இனவாதம் கொஞ்சமல்ல.

அதிலும் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி வாக்குக் கேட்ட பேரினவாத அரசியல்வாதிகளை நாம் மறக்க முடியாது.

அவர் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுத்து விடுவார் என்று கூறி வெற்றியைத் தமதாக்கிக் கொள்ளுமளவுக்கு ஜனாதிபதித் தேர்தலோடு தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரம் சேர்ந்திருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

# நாட்டின் பொருளாதார முன்னேற்றமே இலக்கு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

*(கொழும்பு)*

பொருளாதார ரீதியாக நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதே தனது இலக்கு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அனைத்து விடயங்களும் தற்போது இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாகக் கூறிக்கொண்டிருக்கிறார்.

ஆனால், உண்மையில் என்ன நடந்துள்ளது? பலருக்கு வேலைவாய்ப்பு பறிபோயுள்ளது.

வறுமை தலைதூக்கியுள்ளது. வாழ்வாதாரத்திற்கான வழிகள் இல்லாமல் போயுள்ளன.

சேமிப்புக்கோ முதலீட்டுக்கோ வழிகள் இல்லாமல் மக்கள் பெரும் துன்பத்திற்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். மக்களின் பொருளாதாரத்தை சுருக்கும் பொருளாதாரக் கொள்ளைதான் இன்று நாட்டில் பின்பற்றப்படுகிறது.

இப்படி செய்தால் இயல்பு நிலையில் நாடு வந்துவிட்டது என்று அறிவிக்கலாம்தானே.

நாம் இந்த நிலைமையை மாற்றியமைத்து புதியதொரு நாட்டைதான் மக்களுக்கு வழங்க வேண்டும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

### ரணிலுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ள

# பெரமுன உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

*(கொழும்பு)*

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான கடிதங்கள் விரைவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்னர் கட்சியின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு அண்மையில் கூடியது.

கட்சியில் இருந்து ஒருவரை வேட்பாளராக நியமிப்பது என முடிவு செய்யப்பட்டதுடன், அந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் எம்.பி.க்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது. (ம-7)

# மாத்தளையில் விபத்து பாதசாரி உயிரிழப்பு

மாத்தளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளையிலிருந்து மாத்தளை நோக்கிப் பயணித்த கெப் வாகனம் ஒன்று வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, படுகாயமடைந்த பாதசாரி மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை மஹவெலப் பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# செல்வச் சந்நிதியானுக்கு நாளை தேர்

தொண்டைமானாற்றங்கரையிலமர்ந்து அருள் பாலிக்கும் புராதன புண்ணிய முருக தலமான செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் இரதோற்சவப் பெருவிழா நாளை காலை 8 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாளை காலை வேற்பெருமானுக்கு விஷேட பூஜைகள் இடம்பெற்று வேற்பெருமான், விநாயகர், சண்முகப்பெருமான் சகிதம் எழுந்தருளினைத் தொடர்ந்து முத்தேர் பவனி சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

### அநுராதபுரம் மின்னேரியாவில்

# ஆற்றில் விழுந்த பெண் உயிரிழப்பு

அநுராதபுரம், மின்னேரியா நகரத்தில் ஆற்றில் விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மின்னேரியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தொடர்பில் இதுவரை எந்த விதத் தகவல்களும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண், மின்னேரியா நகரத்தில் உள்ள ஆற்றில் தவறி விழுந்துள்ள நிலையில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இந்தப் பெண், மின்னேரியா பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் கண்பிடிக்கப்பட்டு கரைக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் அவர் ஏறகெனவே உயிரிழந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# யுக்திய நடவடிக்கை 685 பேர் கைது

*(கொழும்பு)*


நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 676 ஆண்களும் 09 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 23 பேர் பொலிஸ் தடுப்புக் காவலுக்கும் 6 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சந்தேக நபர்களிடமிருந்து 225 கிராம் 49 மில்லி கிராம் ஹெரோயின், 281 கிராம் 323 மில்லி கிராம் ஐஸ், 6,388 கிராம் மில்லி 385 கிராம் கஞ்சா, 1,037 போதை மாத்திரைகள் மற்றும் 3,957 கஞ்சாச் செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையாளிகளை நீதியின் முன்நிறுத்து



## மல்லாவியில் மக்கள் போராட்டம்



(தருமபுரம்)

வவுனிக்குளம் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட மல்லாவி யோகபுரம் பகுதியினைச் சேர்ந்த ஆனந்தராசன் சஜீவனின் மரணத்திற்கு நீதி கோரி , பொது மக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தக சங்கம் என்பன இணைந்து பாரிய அளவிலான கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்து இருந்தனர்.

19 நாட்களாகியும் குறித்த இளைஞனின் படுகொலைக்குக் காரணமானவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன் , பொலிசாரின் விசாரணைகள் மந்தகதியில் நடப்பதாக கூறியும் துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கூறியே பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் இன்று குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மல்லாவி மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகிய பேரணி மல்லாவி பொலிஸ் நிலையம் வரை சென்றிருந்தது.

பின்னர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்று கூடி சஜீவன் மரணத்திற்கு நீதி வேண்டும்", "கொலை யாளிகளை நீதியின் முன் நிறுத்து. விசாரணைகளை துரிதப்படுத்தி நீதியை பெற்றுத்தா என்ற எதிர்ப்பு சுலோகங்களை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் நிலையம் முன்பு ஒன்று கூடிய மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை, சம்பவ இடத்திற்கு வருகை தந்த மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி , குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் இளைஞனின் படுகொலைக்கான நீதியினை தான் பெற்று தருவதாகவும் தெரிவித்திருந்தார் இதே வேளை குறித்த காலப் பகுதிக்குள் துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தா விடின் பாரியளவிலான போராட்டம் ஒன்றினை தாம் மேற்கொள்வோம் என்றும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தினையும் தாம் முன்னெடுப்போம் என்றும் எச்சரித்து.பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் பாராளுமன்ற உறுப்பினர்களான செல் வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது . (நி-6-316)

## அனுமதியின்றி கடத்தப்படும் மணல், மரங்கள்

(அக்கராயன்)

ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் இருந்து டிப்பர்களில் சட்ட விரோதமாக மரம், மணல் போன்றன வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தடையினை மீறி கொக்காவில் வழியாக மணல், மரங்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த விடயங்கள் தொடர்பில் கூட்டங்களில் ஆராயப் பட்டும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-350)

## சரியான தருணத்தில் கட்சியின் அறிவிப்பு வெளியாகும் சுமந்திரன் எம்.பி



(கிளிநொச்சி)

சரியான நேரத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்துள்ளது. ஏனைய கட்சிகள் தமது ஆதரவு நிலைப்பாட்டை வெளியிட்ட நிலையில் தமிழரசுக்கட்சி எப்பொழு தமது நிலைப்பாட்டை வெளியிடும் என கேள்வி எழுப்பப்படுகின்றது.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தேர்தலுக்கு அண்மித்த காலத்தில் தான் எமது நிலைப்பாட்டை அறிவித்தோம்.

இந்தத் தடவை அது ஒரு வித்தியாசமாக வரவேண்டும் என்ற எந்த தேவையும் கிடையாது. எல்லா வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையையும் எதிர்பார்க்கிறோம்.

அவர்களின் தேர்தல் அறிக்கையில் முழு நாட்டுக்கும் என்ன சொல்லியிருக்கிறார் என பார்த்து சரியான நேரத்தில் அறிவிப்போம்" என எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார். (நி-6)

## ஆயுதங்கள், புதையல் தேடி மந்துவிலில் அகழ்வு பணி

(நெளுக்குளம்)

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியிலுள்ள தனியார் காணியில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தது.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லை மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவு, பொலிஸார், இராணுவத்தினர், கிராம சேவையாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் இணைந்து அகழ்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் உத்தரவிட்டதனை தொடர்ந்து மூடப்பட்டிருந்தது.

மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-299)



செல்லத்துரை குமாரசாமியின் முதலாம் ஆண்டு நினைவேந்தலும் திருவுருவச்சிலை திறப்பும் அண்மையில் யாழ்.உடுப்பிட்டியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குறித்த திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்ததுடன், "குமாரசாமி இசைத்தமிழ்க் கழகம்" என்னும் இசைக் கல்லூரியும் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகள்...

சேவை நேற்று வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது.

41 பயணிகளுடன் குறித்த கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

வந்தடைந்த கப்பலையும் பயணிகளையும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

சிவகங்கை என்ற பெயரில் புதிய பயணிகள் கப்பல், நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காலை புறப்பட்டு, காங்கேசன்துறைக்கு பிற்பகல் வந்தடைந்தது.

தொடர்ந்து கப்பல் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டு இன்று காலை புறப்பட்டு பிற்பகல் நாகப்பட்டினம் துறைமுகத்தைச் சென்றடையும்.

இக் கப்பல் சேவை 18ஆம் திகதியிலிருந்து நாள்தோறும் நாகப்பட்டினத்திலிருந்து காலை 8 மணிக்கும், காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கும் கப்பல் இயக்கப்படும். (ம-7,33)

## மின்சாரம்...

ழுந்தவராவார்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வியாழக்கிழமை இரவு தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மகனை நீண்ட நேரமாகியும் காணாமையினால் அவரது தந்தை தேடியுள்ளார். இதன்போது காணியின் பின்புறத்தில் குறித்த இளைஞன் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர் வீட்டின் பின்புறத்தில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

## தமிழரசுக்...

கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு விரைவான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேட்புமனு கையளிப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்ப் பொது வேட்பாளரான பா.அரியநேந்திரன் சங்குச் சின்னத்தில் போட்டியிடுகிறார். ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் சிந்திக்காமல் தமிழ் மக்கள் சார்பில் சிந்திக்க வேண்டும் என்பதுடன், இதற்கான கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றதாக வெளிப்படையாகத் தெரிவிப்பதாகவும், ஆனால் ஒரு சிறுபான்மை தரப்பினர் இதனைத் தடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மோட்டார்...

திகதி ஆலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு தனது சகோதரனுடன் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் மாதகல் - பண்டத்தரிப்பு வீதியில் பயணித்த வேளை நிலை தடுமாறி கீழே விழுந்த நிலையில் மயக்கமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் உடனடியாக சங்கானை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகத் தெல்லிப்பளை ஆதார வைத்தியாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் அவர் மூளைச்சாவடைந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## 27 அங்குல...

நெடுவரிசையா..? என்பதைத் தேர்தல் ஆணையம் மட்டுமே தீர்மானிக்க வேண்டும் என்று அரசாங்க அச்சகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி , இரட்டை நெடுவரிசை வாக்குச்சீட்டாக இருந்தால், வாக்குச்சீட்டு 13.5 அங்குல நீளமும் அகலமும் கொண்டதாக இருக்கும்.

"ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்களுக்கு வழங்கப்படவுள்ள மிக நீண்ட வாக்குச்சீட்டு இதுவாகும். (ம-7)

## யாழ்.போதனா...

(வயது-35) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 14ஆம் திகதி வயிற்றுக்குத்து காரணமாக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கிருமித் தொற்றுக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர்மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## ரணி...

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து 34 கட்சிகள் கையெழுத்திட்டுள்ளன. "இயலும் ஸ்ரீ லங்கா" உடன்படிக்கையில் 34 கட்சிகள் மற்றும் கூட்டணியினர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு பத்திரமுல்லையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் "இயலும் ஸ்ரீ லங்கா" உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ம-7)

## வாழ்க்...

வேளை, திறமைசாலிகளின் உயர்ந்தளவான வெளியேற்றமானது தொழிலாளர் பற்றாக் குறைகளுக்கும், குறைந்த உற்பத்தித் திறனுக்கும் வழிவகுக்கும்.

இது பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வாக அமையும்.

2025ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் உயர்வடைந்துள்ள பணவீக்கத்தை 5 வீதம் நிலையாக உறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும், ஊழியர்களின் சம்பள வீதத்துக்கும் இடையில் நீண்ட இடைவெளி காணப்படுவதாகவும் சம்பள அதிகரிப்பு நாணயக் கொள்கை செயற்றிட்டத்துக்கு பாதகமானதாக இருக்காது என்றும் இலங்கை மத்திய வங்கி உறுதியளித்துள்ளது.

இதேவேளை, ஆட்சி மாற்றத்துக் கேற்ப பொருளாதாரக் கொள்கைகளை இனி மாற்றியமைக்க முடியாது எனவும் இலங்கை மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது. (ம-7)

### மஹஜன சம்பத
திகதி 2024.08.16
சீட்டிழுப்பு இலக்கம் 5567
R 2 0 4 7 9 1 1
அத சம்பத R 4 7 9 1 சீட்டிழுப்பு இலக்கம் 142

### தன நிதானய
திகதி - 2024.08.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1597
E 12 19 45 63 E
Double Chance 73304

### மெகா பவர்
திகதி 16/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1915
G 17 03 06 13 27
Double Chance 00576

### லக்கி 7 VIP
திகதி 2024.08.16
சீட்டிழுப்பு இலக்கம் 0393
L 1 0 1 1 9 7 L

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3809
சீட்டிழுப்பு திகதி 16.08.2024
A 06 13 22 32
A 16763

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.16
சீட்டிழுப்பு இலக்கம் 0876
மிதுனம் 01 23 41 46 மிதுனம்
50313 26

### சுபிரி வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
16.08.2024 வெற்றி வாரம் 275
V 7 2 6 9 9 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,200,452.00
42654

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2541 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 16.08.2024 தினம் வெள்ளி
11 49 51 56 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,328,105.60

### சனிதா
திகதி 2024.08.16 வெற்றி வாரம் 4702
01 10 46 60 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,711,352.00
செவ்ன்ட் சான்ஸ் ரூ.100,000/- 85838

### சசிரி
வெற்றி வாரம் 516
2024.08.16 பச்சை
06 24 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,176,880/-

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4253 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.16 தினம் வெள்ளிக்கிழமை
19 28 31 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,596,662.00
193924

### ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
J 30 18 28 36 66
1717 16.08.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 539,418,451.40

### அட கோடிபதி
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2367
சீட்டிழுப்பு திகதி : 2024.08.16
09 39 61 65 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 59,298,015.20
270420

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

- இணுவில், இந்து, கௌரவ குடும்பம், 1990, அனுசம், Quantity Surveyor, அவுஸ்திரேலியா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இளவாலை - கட்டுவன், இந்து, கௌரவ குடும்பம், 1991, திருவோணம், Msc Engineer, Australia, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இடைக்காடு - காரைநகர், இந்து, கௌரவ குடும்பம், 1992, சித்திரை, MBBS Doctor, Australia, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- Trincomalee, இந்து, கௌரவ குடும்பம், 1993, பூராடம், Bachelor of Engineering, Newzealand மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருநெல்வேலி, இந்து, கௌரவ குடும்பம், 1994, ரோகிணி, BEng Computer Science, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை, இந்து, கௌரவ குடும்பம், 1989, கேட்டை, Phd in Civil Engineering, Lecturer மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குடும்பம், 1988, உத்தரம், Phd in Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, கௌரவ குடும்பம், 1987, பரணி, Charted Management Accountant, London மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை - சாவகச்சேரி, இந்து, கௌரவ குடும்பம், 1987, பூசம், Bsc Engineer, Newzealand, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1703)

www.thaalee.com | - 077 539 3728 | - 077 803 8193

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 239/= | Max 5Kg |
| 1 Kg கோதுமை மா | - 159/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1Kg செத்தல் மிளகாய் | - 760/= | |
| 1 Kg பொன்னி அரிசி | - 272/= | |
| 1Kg சம்பா | - 228/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg Lanka கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3450/= | ~~3900/=~~ |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 56/= | ~~80/=~~ |

400g Anchor




தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (255)

Happy Supermarket 0777 8080 30

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

## வீடு வாடகைக்கு உண்டு

கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(அலுவலகங்கள் நடாத்துவதற்கும் உகந்தது.) (1719)

தொடர்பு:- 077 248 7320

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.



CIMS College 49A, Chapel Street, Jaffna.

(C-0996)

College Of International Migration Skills 0777 068 777 / 077 7719 322

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (216)

075 033 6759

## இந்தியன் விசா சேவைகள்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (255)

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), "கிளிப்" போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

கம்சியா பற் சிகிச்சைப் பிரிவில்

(யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக, Singer Company அருகில்) நடைபெறுகிறது.

578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-997)

077 375 4490
077 220 2769

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு

(C-0996)


# ஈன்ற அன்னையென மத்தி அன்னையும் ஏற்றிப் போற்றுகிறாள் வாழி! வாழி!!

முப்பது வருடங்களாக (17.08.1994 இல் இருந்து) மக்களின் மனங்களை வென்று தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழும் வரலாற்று நாயகன்

## மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா

(அமைச்சர் - கடற்றொழில் அமைச்சு)



மத்தியின் புகழ்பூத்த மாணவர் சிகரமென
மகத்தான சேவைபல ஆற்றுகின்ற நாயகமே
வித்தான கல்விக்கு விடிவெள்ளி என்றிடவே
விண்ணுயரும் கட்டடங்கள் நீச்சல் தடாகம்
முத்தான மாணவர்க்காய் புலமைப்பரிசில் பல
கணினிக்கூடம் நவீன மலசலகூடமென
சித்தமுற விளையாட்டு மேன்மைக்கு திட்டமுடன்
சிறந்த பல வழிவகைகள் செய்திட்ட வித்தகனே !

கல்வியே மூச்சென்று கனதியுடன் சிந்தித்து
காத்திரமாய் பொறியியல் பீடத்தை கொணர்ந்தவரே
வல்லமையாய் உயர்தொழில் நுட்ப நிறுவனத்தை
வடக்கிலே விஸ்தரித்து வளத்தை சேர்த்தவரே
அல்லலுறும் மக்கள் தம் வாழ்வில் ஒளியூட்ட
அரசியலில் புதுமைப் புரட்சி பல செய்தவரே
இல்லாதோர் என்ற இழிநிலைதான் இல்லாமல்
எல்லோரும் மேன்மையுற உழைக்கும் உத்தமரே !

மூன்று தசாப்தங்கள் நாடாளுமன்றத்தை
முனைப்போடு கையாண்ட பெருமையுறு உறுப்பினரே
நன்றே உணர்ந்து நடைமுறைச் சாத்தியமாய்
அமைச்சரவை அமைச்சராய் அதிகம் உழைத்தவரே
ஆன்ற புலமையினால் ஒருங்கிணைப்பு குழுவை
ஆளுமை செய்த அன்பின் குரலோனே
ஈன்ற அன்னையென மத்தி அன்னையும்
ஏற்றிப் போற்றுகிறாள் வாழி ! வாழி !!

வாழ்த்துவோர் :- பெற்றோர்கள், பழைய மாணவர்கள்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

(C-995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.